## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்

**முன்னிலை: திரு.B.பீட்டர், M.A., B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**வேடசந்தூர்.**

**திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் மாசி 29-ம் நாள்**

**2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.85/2022**

**(CNR.No.TNDG160001172022)**

R.ராஜேந்திரன் ...வாதி

**//எதிர்//**

திருமதி.கமலவேணி ....பிரதிவாதி

இந்த வழக்கானது 06.06.2022-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 11.02.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.C.ஸ்டான்லி மனோகரன்** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு 06.01.2023 ம் தேதி ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டு, வாதி தரப்பு வாதம்

கேட்கப்பட்டும், தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## தீர்ப்புரை

இவ்வழக்கானது தாவா சொத்தைப் பொறுத்து வாதிக்கு ரூ.90000/-க்கு வாதிக்கு பிரதிவாதி கிரையப் பத்திரம் எழுதி பதிந்து கொடுத்து, வில்லங்க சுத்தியாய் சுவாதீனம் ஒப்படைக்கும்படி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வழங்கவும் அல்லது கிரையப்பத்திரம் எழுதிப் பதிந்து கொடுத்து சுவாதீனம் ஒப்படைக்க கோரியும், தாவா வழக்குச் சொத்துக்களை பிரதிவாதி வேறுநபர்களுக்கு ஈடு, ஒத்தி, கிரையம் போன்ற வில்லங்களுக்கு உட்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 1ன் படி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :-

(1.1) தாவா சொத்து பிரதிவாதியின் தகப்பனாரான லேட்.சுப்பாரெட்டியார் என்பவருக்கு பூர்வீகப்பாத்தியப்பட்ட சொத்து ஆகும். பிரதிவாதியின் தகப்பனார் லேட்சுப்பா ரெட்டியார் இறந்தபிறகு தாவா சொத்தை பிரதிவாதியும், அவரது வகையறா ஆட்களும் எந்தவித பாகப்பிரிவினையும் இல்லாமல் பொதுவாகவும், கூட்டாகவும் அனுபவித்து வந்து 30 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பாகப்படி

பிரதிவாதிக்கு தாவா சொத்து கிடைத்துள்ளது. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களை வாதி பிரதிவாதியிடம் ரூ.90000/-க்கு கிரையம் செய்துகொடுப்பதாக வாதியும், பிரதிவாதியும் சேர்ந்து 27.06.2005 ம் தேதி ஒரு கிரைய உடன்படிக்கை ஆவணம் எழுதி பதிவு செய்துள்ளார்கள். அந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கண்ட சரத்துக்களின்படி வாதியிடமிருந்து பிரதிவாதி மேற்படி கிரையத்திற்கு முன்பணமாக 27.06.2005 ம் தேதி ரூ.10000/-ஐ பெற்றுக்கொண்டுள்ளார். மேற்படி கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் பாக்கி கிரையத் தொகை ரூ.80000/-ஐ வாதி 27.06.2005 ம் தேதியிலிருந்து மூன்று வருட காலத்திற்குள் பிரதிவாதிக்கு செலுத்தி வாதியின் செலவில் கிரையப்பத்திரம் எழுதி பதிந்துகொள்ள வேண்டும் என்றும் மற்றும் பல சரத்துக்கள் கண்டுள்ளது.

(1.2) தாவா கிரைய உடன்படிக்கையின்படி வாதி பிரதிவாதியை சந்தித்து தாவா சொத்துக்களை வாதி பெயரில் கிரையப்பத்திரம் எழுதி பதிந்து கொடுக்க வேண்டும் என்று பலமுறை கேட்டதற்கு பிரதிவாதி வாதிக்கு கிரையப்பத்திரம் எழுதி பதிந்து தருவதாக சொல்லி தொகை ரூ.20000/-ம் வேண்டும் என்று பிரதிவாதி வாதியை துயர்ந்து வந்ததின்பேரில் கடந்த 20.01.2011 ம் தேதி வாதியிடம் பிரதிவாதி மேற்கொண்டு தொகை ரூ.20000/-மும் பெற்றுக்கொண்ட பிரதிவாதி தாவா கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் பின்புரம் 20.01.2011 ம் தேதியில் இருந்து 3 வருடங்களுக்கு கிரைய உடன்படிக்கையை கால நீட்டிப்பு செய்து பிரதிவாதி கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். இந்நிலையில் பிரதிவாதி தன்னுடைய

சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்காக மேற்கொண்டு தொகை ரூ.10000/-ம் வேண்டும் என்று வாதியிடம் கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் வாதியிடம் கடந்த 10.06.2013 ம் தேதி மேற்கொண்டு தொகை ரூ.10000/-ஐ பிரதிவாதி பெற்றுக்கொண்டு அதன்படி மேற்படி 27.06.2005 ம் தேதிய கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் பின்புரம் 10.06.2013 ம் தேதி ரூ.1000/-ஐ வரவு வைத்து மீண்டும் 3 ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு செய்து பிரதிவாதி கையெழுத்து செய்து கொடுத்துள்ளார். கடந்த 07.02.2016 ம் தேதி பிரதிவாதியை சந்தித்து தாவா கிரைய உடன்படிக்கை ஆவணப்படி வாதி பெயருக்கு கிரையப்பத்திரம் எழுதி உடன்படிக்கை ஆவணப்படி வாதி பெயருக்கு கிரையப்பத்திரம் எழுதி பதிந்து கொடுக்க கேட்டபோது பிரதிவாதி தன்னுடைய மருத்துவ செலவுக்காக மேற்கொண்டு தொகை ரூ.20000/-ம் தேவைப்படுவதாக வாதியிடம் கேட்டதின்பேரில் மேற்கொண்டு தொகை ரூ.20000/-ஐ 10.02.2016 ம் தேதி பெற்றுக்கொண்டு வரவு வைத்து மீண்டும் 3 வருட காலத்திற்கு தாவா கிரைய உடன்படிக்கையை காலநீட்டிப்பு செய்து கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்.

(1.3) பிரதிவாதி கிரைய உடன்படிக்கை ஆவணத்தின்படி வாதியின் பெயருக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க முன்வராமல் காலம் கடத்தி வந்து கடந்த 05.10.2018 ம் தேதி பிரதிவாதி தன்னுடைய வீட்டு செலவுக்காக மேற்கொண்டு தொகை ரூ.10000/-ம் தேவைப்படுவதாக வாதியிடம் கேட்டதின்பேரில் வாதி பிரதிவாதிக்கு மேற்கொண்டு தொகை ரூ.10000/மும், 20.01.2021 ம் தேதி தொகை

ரூ.10000/-மும் மீண்டும் 3 வருட காலத்திற்கு தாவா கிரைய உடன்படிக்கையை காலநீட்டிப்பு செய்து கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். கிரைய உடன்படிக்கைக்கு முன்பணமாக பல தேதிகளில் பிரதிவாதி வாதியிடம் பெற்றுள்ள மொத்த தொகை ரூ.80000/-ஆகும். தாவா 27.06.2005ம் தேதிய கிரைய உடன்படிக்கை ஆவணத்தின்படி வாதி தற்போதும் மீதித் தொகை ரூ.10000/-ஐ பிரதிவாதி வசம் செலுத்தி வாதியின் பத்திர செலவில் வாதி பெயரில் கிரையம் பதிந்துகொள்ள தொடர்ந்து தயாராகவும், விருப்பமாகவும் Ready and willing ஆக இருந்து வந்த நிலையில் பிரதிவாதி வாதிக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்காமல் காலம் கடத்தி வந்தார். இந்நிலையில் வாதி கடந்த 15.12.2021ம் தேதி பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பிய நிலையில் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டு எந்தவித பதிலறிவிப்பும் அனுப்பவில்லை. தாவா சொத்துக்களை பிரதிவாதியும், அவரது கூட்டாளிகளும் சேர்ந்து வேறு நபர்களுக்கு விற்கிரையம் செய்யப்போவதாக 30.12.2021ம் தேதியில் இருந்து ஊரில் பிரஸ்தாபித்து வருகிறார்கள். எனவே, தாவா வழக்குச் சொத்தை ஒப்பந்தப்படி பிரதிவாதியிடமிருந்து வாதி கிரையப்பத்திரம் எழுதிப் பதிந்து வாங்க ஏற்றதை ஆற்றுக பரிகாரம் பெறவும், வழக்கு முடியும் வரை தாவா சொத்துக்களை பிரதிவாதி வேறு நபர்களுக்கு ஈடு, ஒத்தி, கிரையம் போன்ற வில்லங்கங்களுக்கு உட்படுத்தக்கூடாது என்று நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் 06.01.2023 ம் தேதி தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு, ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டுள்ளார்.

3. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4. வாதி தரப்பில், வாதி ராஜேந்திரன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும், வா.சா.2 ஆக ராஜேந்திரன் என்பவரும், வா.சா.3 ஆக லோகநாதன் என்பவரும், வா.சா.ஆ.4 ஆக முருகன் என்பவரும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **தீர்வு** :

வாதி தரப்பு வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது. சாட்சிய சான்றாவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலான விசாரிக்கப்பட்ட சாட்சிகள் சாட்சிகள் பிராதை தழுவி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6. வாதி வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் தாவா சொத்து ஆதியில் பிரதிவாதியின் தகப்பனாரான சுப்பாரெட்டியார் என்பவருக்கு பூர்வீக

பாத்தியப்பட்டு அவர் இறப்பிற்கு பின்பு பிரதிவாதியும், அவரது வகையறா ஆட்களும் கூட்டாக அனுபவித்து வந்து சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு பாகப்பிரிவினை செய்து அதன்அடிப்படையில் பிரதிவாதிக்கு கிடைத்த சொத்து என்றும், அதை பொறுத்து வாதியும், பிரதிவாதியும் சுத்த கிரையத்திற்கு பேசி ரூ.90,000/-ம் கிரைய தொகை என்று ஒப்புக்கொண்டு கடந்த 27.06.2005 ம் தேதி கிரைய உடன்படிக்கை ஆவணம் பதிவு செய்துகொண்டார்கள் என்றும், அதன்படி 27.06.2005 ம் தேதியில் பிரதிவாதி ரூ.10000/-ஐ முன்பணமாக பெற்றுக்கொண்டார் என்றும், மீதி கிரைய பாக்கித்தொகையான ரூ.80,000/-ஐ 27.06.2005 ம் தேதியிலிருந்து மூன்று வருட காலத்திற்குள் செலுத்தி கிரைய பத்திரம் எழுதி கொள்ள வேண்டும் என்றும், ஆனால் பலமுறை துயர்ந்தும் பிரதிவாதி கிரைய பத்திரம் எழுதி கொடுக்காமல் இருந்து வந்து கடந்த 20.01.2011 ம் தேதி பிரதிவாதி வாதியிடம் ரூ.20,000/-ஐ பெற்றுக்கொண்டு 27.06.2005 ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் பின்புறம் மேலும் 3 வருட காலங்களுக்கு நீட்டிப்பு செய்து கையொப்பம் செய்து கொடுத்தார் என்றும், மேலும் 10.06.2013 ம் தேதி மீண்டும் தன்னுடைய சில்லறை கடன்களை தீர்ப்பதற்கு வாதியிடம் ரூ.10,000/-ம் பெற்றுக்கொண்டு மீண்டும் 3 வருட காலத்திற்கு நீட்டிப்பு செய்து மேற்படி கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் கையெழுத்து செய்தார் என்றும், மீண்டும் 7.02.2016 ம் தேதி வாதி பிரதிவாதியை சந்தித்து கேட்டபோது பிரதிவாதி தன்னுடைய மருத்து செலவிற்காக கேட்டதின்பேரில் வாதியிடமிருந்து

பிரதிவாதி ரூ.20,000/-ஐ பெற்றுக்கொண்டு 10.02.2016 ம் தேதியிலிருந்து மீண்டும் 3 வருட காலத்திற்கு நீட்டிப்பு செய்துகொடுத்தார் என்றும், இந்நிலையில் கிரைய பத்திரம் எழுதி கொடுக்காமல் காலம் தாழ்த்தி வந்து கடந்த 05.10.2018 ம் தேதி மீண்டும் பிரதிவாதி தன்னுடைய வீட்டு செலவிற்காக ரூ.10,000/-ஐ பெற்றுக்கொண்டு 05.10.2018 ம் தேதியிலிருந்து 3 வருட காலத்திற்கு கிரைய உடன்படிக்கை காலநீட்டிப்பு செய்து கொடுத்தார் என்றும், மேலும், அவசர நிமித்தம் காரணமாகவும், கடன்களை தீர்ப்பதற்கும் 20.01.2021 ம் தேதி வாதியிடமிருந்து பிரதிவாதி ரூ.10,000/-ஐ பெற்றுக்கொண்டு 3 வருட காலத்திற்கு கிரைய உடன்படிக்கையை நீட்டிப்பு செய்து கொடுத்தார் என்றும், இவ்வாறாக கிரையத்திற்கு முன்பணமாக மொத்த தொகை ரூ.80,000/-ஐ பிரதிவாதி பெற்றுக்கொண்டார் என்றும், கடந்த 27.06.2005 ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் படி வாதி தற்போது மீதி தொகை ரூ.10,000/-ஐ பிரதிவாதி வசம் செலுத்தி வாதி பெயரில் கிரையம் பதிந்து கொள்ள தயாராகவும், விருப்பமாகவும் இருந்து வருகிறார் என்றும், கிரையப்பாக்கி தொகையான ரூ.10,000/-ஐ பெற்றுக்கொண்டு கிரைய பத்திரம் எழுதி கொடுக்காமல் இன்று நாளை என வீண் காலம் கடத்தி வருகிறார் என்றும், இதனால் 15.12.2021 ம் தேதி கிரைய பாக்கி தொகையை பெற்றுக்கொண்டு கிரையப்பத்திரம் எழுதிகொடுக்க வேண்டும் என்று பிரதிவாதியை வாதி கேட்டார் என்றும், 24.12.2021 ம் தேதி அறிவிப்விப்பை பெற்றுக்கொண்டு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை

என்றும், இந்நிலையில் பிரதிவாதியும் அவரது கூட்டாளிகளும் சேர்ந்து தாவா சொத்தை வேறு நபர்களுக்கு விற்கிரையம் செய்யப்போவதாக கடந்த 30.12.2021ம் தேதியிலிருந்து ஊரில் கூறிவருகிறார்கள் என்றும், எனவே, கிரைய உடன்படிக்கை ஆவணத்தின்படி பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து கிரைய எழுதி கொடுக்க வேண்டும் என்றும், வழக்கு முடியும் வரை தாவா சொத்துகளை பிரதிவாதி வேறு நபர்களுக்கு ஈடு, ஒத்தி, கிரையம் போன்ற வில்லங்கங்கள் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவேண்டும் என்றும் வாதி கூறியுள்ளார்.

7. வா.சா.ஆ.1 என்பது 27.06.2005ம் தேதி வாதியும், பிரதிவாதியும் பிறப்பித்துக்கொண்ட கிரைய உடன்படிக்கை ஆவணம். வா.சா.ஆ.2 என்பது 15.12.2021ம் தேதி வாதியின் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு. வா.சா.ஆ.3 என்பது 24.12.2021ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை. வா.சா.ஆ.4 என்பது 20.01.2011ம் தேதி தாவா கிரைய உடன்படிக்கை காலக்கெடு நீட்டிப்பு தொடர்பான பிரதிவாதி மற்றும் சாட்சியின் மேலோப்பம். வா.சா.ஆ.5 என்பது 16.03.2013ம் தேதியிட்ட தாவா கிரைய உடன்படிக்கை காலக்கெடு நீட்டிப்பு தொடர்பான பிரதிவாதி மற்றும் சாட்சியின் மேலொப்பம். வா.சா.ஆ.6

என்பது 10.02.2016ம் தேதியிட்ட தாவா கிரைய உடன்படிக்கை காலக்கொடு நீட்டிப்பு தொடர்பான பிரதிவாதி மற்றும் சாட்சியின் மேலொப்பம். வா.சா.ஆ.7 என்பது 05.10.2018ம் தேதி தாவா கிரைய உடன்படிக்கை காலக்கொடு நீட்டிப்பு தொடர்பான பிரதிவாதி மற்றும் சாட்சியின் மேலொப்பம். வா.சா.ஆ.8 என்பது 20.01.2021ம் தேதியிட்ட தாவா கிரைய உடன்படிக்கை காலக்கெடு நீட்டிப்பு தொடர்பான பிரதிவாதி மற்றும் சாட்சியின் மேலொப்பம்.

8. வா.சா.ஆ.1யை பரிசீலிக்கையில் தாவா சொத்தை பொறுத்து வாதியும், பிரதிவாதியும் கடந்த 27.06.2025ம் தேதி ரூ.90,000/-ம் கிரையத்தொகை என்று பேசி, அதே தேதியில் ரூ.10,000/-ம் கிரைய முன்தொகையாக வாதியிடமிருந்து பிரதிவாதி பெற்றுக்கொண்டு அதே தேதியிலிருந்து 3 வருட காலங்களுக்குள் கிரைய பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என்று பதிவு உடன்படிக்கை பத்திரத்தை ஏற்படுத்தி கொண்டனர் என்றும், அதன்பின்பு வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களின்படி பல்வேறு தேதிகளில் முன் தொகையாக மொத்தம் ரூ.80,000/-ஐ பெற்றுக்கொண்டு காலநீட்டிப்பு செய்துவந்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. மேலும், வா.சா.ஆ.1யை பரிசீலிக்கையில் தாவாசொத்தானது பிரதிவாதியின் தந்தை சுப்பாரெட்டியாருக்கு பூர்வீக பாத்தியப்பட்டு அவருடைய இறப்பிற்கு பின்பு பிரதிவாதியும் மற்றும் அவரது வகையறா ஆட்களும் பிரிவினை இல்லாமல் கூட்டாகவும், ஏகமாகவும்

அனுபவித்து வரக்கூடிய சொத்து என்று தெரியவருகிறது. எனவே, வா.சா.ஆ.1ன்படி இறந்துபோன சுப்பாரெட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் சுப்பாரெட்டியாரின் வாரிசு என்ற அடிப்படையில் பிரதிவாதிக்கு பாகப்பாத்தியம் உள்ளது என்று தெரியவருகிறது. மேலும், வாதி 27.06.2005 ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஆவணத்தின்படி கிரையம் செய்துகொடுக்க பல்வேறு தேதிகளில் பிரதிவாதியை துயர்ந்து வந்துள்ளார் என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவண சாட்சியங்களின்படியும் மற்றும் வாய்மொழி சாட்சியத்தின்படியும் இந்நீதிமன்றம் அறிய வருகிறது.

9. மேலும், வா.சா.ஆ.1ன்படி வாதி கிரையம் செய்துகொடுக்காமல் காலம் தாழ்த்தி வந்த சூழலில் வா.சா.ஆ.2ன்படி கடந்த 15.12.2021ம் தேதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பை ஒன்றை அனுப்பி வா.சா.ஆ.1ன்படி கிரைய பாக்கி தொகை ரூ.10,000/-ஐ பெற்றுக்கொண்டு கிரையம் எழுதி கொடுக்க கேட்டுள்ளார். ஆனால் பிரதிவாதி மேற்படி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பாமலும், கிரையம் எழுதி கொடுக்காமலும் காலம் தாழ்த்தி வந்துள்ளார் என்பது வாதி தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவண வாய்மொழி சாட்சியங்களின்படி வா.சா.ஆ.1ன்படி கிரையம் பதிந்துகொள்ள வாதி எப்போதும் தயராகவும், விருப்பத்துடனும் இருந்து வந்துள்ளார் என்பது வாதிதரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக, இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகின்றது.**

**i) வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தின்படி கிரையப்பாக்கி தொகை ரூ.10,000/-ஐ பிரதிவாதி வாதியிடம் இருந்து பெற்றுக் கொண்டு, வாதியின் பெயருக்கோ அல்லது வாதி விரும்பும் நபரின் பெயருக்கோ இரண்டு மாதத்திற்குள் தாவா சொத்தை பதிந்து கிரையப்பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என்றும், சொத்தின் சுவாதீனத்தையும் வாதிக்கு ஒப்படைக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

**ii) இவ்வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு, பிரதிவாதி கொடுக்க வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.**

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

B.Peter Digitally signed by B.Peter

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வேடசந்தூர்.**

**1. வாதி தரப்பு சாட்சிகள் :-**

1. வா.சா.1. - ராஜேந்திரன்

2.வா.சா.2 - ராஜேந்திரன்

3.வா.சா.3 - லோகநாதன்

4.வா.சா.4 - முருகன்

**2. வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 27.06.2005 | வாதியும், பிரதிவாதியும் பிறப்பித்துக்கொண்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.2 | 15.12.2021 | வாதியின் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் மற்றும் அசல் |
| வா.சா.ஆ.3 | 24.12.2021 | வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் |
| வா.சா.ஆ.4 | 20.01.2011 | தாவா கிரைய உடன்படிக்கை காலக்கெடு நீட்டிப்பு தொடர்பான பிரதிவாதி மற்றும் சாட்சியின் மேலொப்பம் | அசல் |
| வா.சா.ஆ.5 | 16.03.2013 | தாவா கிரைய உடன்படிக்கை | அசல் |

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| | | காலக்கெடு நீட்டிப்பு தொடர்பான பிரதிவாதி மற்றும் சாட்சியின் மேலொப்பம் | |
| வா.சா.ஆ.6 | 10.02.2016 | தாவா கிரைய உடன்படிக்கை காலக்கொடு நீட்டிப்பு தொடர்பான பிரதிவாதி மற்றும் சாட்சியின் மேலொப்பம் | அசல் |
| வா.சா.ஆ.7 | 05.10.2018 | தாவா கிரைய உடன்படிக்கை காலக்கெடு நீட்டிப்பு தொடர்பான பிரதிவாதி மற்றும் சாட்சியின் மேலொப்பம் | அசல் |
| வா.சா.ஆ.8 | 20.01.2021 | தாவா கிரைய உடன்படிக்கை காலக்கெடு நீட்டிப்பு தொடர்பான பிரதிவாதி மற்றும் சாட்சியின் மேலொப்பம் | அசல் |

**3. பிரதிவாதி தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் :-** இல்லை.

B.Peter Digitally signed by B.Peter

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வேடசந்தூர்.**